# டாபிந்து

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது

ஆரம்பம் 1984

மலர் 41 இதழ் 03 2025 பங்குனி மாத பதிப்பு


# சர்வதேச மகளிர் தின கொண்டாட்டம்







40 ஆண்டுகளுக்கும் மேலாக பெண்கள் மற்றும் அவர்களின் உரிமைகளுக்காக தம்மை அர்ப்பணித்துள்ள டாபிந்து கூட்டமைப்பின் இவ்வருட சர்வதேச மகளிர் தினமானது, கடந்த பங்குனி மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று, கட்டுநாயக்க அவரிவத்தை மணிக்கூட்டு கோபுரத்திற்கருகில் இடம்பெற்றது. "அனைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்காக உரிமைகள், சமத்துவம் மற்றும் வலுப்படுத்ததலை உறுதிப்படுத்தல்" எனும் முக்கிய கருப்பொருளின் கீழ் ஓர் அமைதிப் பேரணியாக இது கொண்டாடப்பட்டது.

டாபிந்து கூட்டமைப்பின் தற்போதைய நிர்வாக இயக்குநர் திருமதி சமிலா துஷாரி தலைமையிலான இந்த அமைதிப் பேரணியில் டாபிந்து கூட்டமைப்பின் அலுவலக உத்தியோகத்தர்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள் கைகோர்த்தது குறிப்பிடத்தக்கது. விசேடமாக, இதில் பங்கேற்றவர்களில் பெரும்பாலோர் கட்டுநாயக்க மற்றும் பியகம சுதந்திர வர்த்தக வலயங்களில் பணிபுரியும் பெண்கள் சமூகத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

2ஆம் பக்கம் பார்க்க...

## உள்ளே!


பக்கம் 03 – பாரம் சுமக்கும் பெண்கள்
பக்கம் 04 – அவள்
பக்கம் 05-06 – எமது பணி
பக்கம் 07-08 – தேசிய மற்றும் சர்வதேச பணி
பக்கம் 09 – நமது உரிமைகள் பற்றி அறிந்து கொள்வோம்
பக்கம் 10 – எமது சிந்தனை
பக்கம் 11 – கவிதைப் பகுதி பகுதி, வெளிநாட்டுச் செய்தி

## வியர்வைத்துளி கூட்டமைப்பு

221, வெலபட வீதி, கட்டுநாயக்க.
தொ.பே: 011 4 851 383
மின்னஞ்சல்: dabindu.infoco@gmail.com
முகநூல்: dabindu collective sri lanka:


# சர்வதேச மகளிர் தினத்தின் சவால்கள்

114 ஆண்டுகளின் வரலாற்றை நினைவுகூரும் பெண்கள் உலகளாவிய ரிதியில் வென்ற சாதனைகளான, பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் கலாச்சார படைப்புக்களைக் கொண்டாடும் தினமாக மார்ச் மாதம் 8ம் திகதி காணப்படுகின்றது. தற்போது, பாலின சமத்துவம், இனப்பெருக்க சுகாதார உரிமைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது. குறிப்பாக, பணியிடத்தில் உள்ள பெண்கள், வாழ்க்கை ஊதியம், ஒழுக்கமான பணிச்சூழல் மற்றும் நல்ல சட்டங்கள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான வேலைகளுக்கு கவனம் செலுத்தக் கோரி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

எவ்வாறாயினும், பெண்கள் குறித்து காணப்படும் தரவுகள், உலகளாவிய ரீதியிலும், பிராந்திய அளவிலும் அவர்களின் உரிமைகள் நாளுக்கு நாள் பின்னடைந்து செல்வதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. பெண்களின் தலைமைத்துவம், தீர்மானமெடுத்தல் மற்றும் அரசியல் தலைமைத்துவத்திற்கு உயருவதற்கு நடைமுறையில் உள்ள காலாவதியான சட்ட கட்டமைப்புகள், அவர்களை சமூக செயல்முறையிலிருந்து விலக்குவதில் வெற்றி பெற்றுள்ளன.

சர்வதேச கவனத்தை ஈர்த்த, உலகப் பணக்காரர்களுக்கு ஆடைகளைத் தைப்பதில் முன்னணியில் இருக்கும் பெண்களில் பெரும்பாலோர், தொழிலாளர் சக்தியின் பாதிப்புக்கள்ளாகியுள்ளனர். வேலையில் இருந்து பெற்ற எட்டு மணி நேர வேலை வாரத்தை ஒழித்து, ஐந்து நாள் வேலை வாரங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், உரிமையாளரின் பங்கை மேலும் அதிகரிக்க, அவர்கள் இருக்கும் சட்டங்களை அப்பட்டமாக மீறுகிறார்கள். பணியிடங்களிலும், தெருக்களிலும், தங்குமிடங்களிலும் வன்முறை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சங்கத்தின் சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம் பேசும் சுதந்திரம் மேலும் இழக்கப்பட்டள்ளது. மேலும் சமூகப் பாதுகாப்பு, வேலைப் பாதுகாப்பு மற்றும் கண்ணியம் குறித்து தற்போதுள்ள விவாதங்களின் அர்த்தம் தொழிலாளர்களிடம் இழக்கப்பட்டுள்ளது. ILO மாநாடு, CEDAW கொள்கை மற்றும் CSW 69 மாநாடுகள் தற்போது உலகளாவிய கவனத்தைப் பெற்று வரும் இந்த நேரத்தில், அனைவருக்கும் நல்ல சட்டங்கள் மற்றும் மாநாடுகள் கொண்ட ஒரு நாளைக்காக நாம் ஒன்றுகூடுவோம், இதனால் அந்த மாநாடுகளின் உண்மையான உரிமைகளை அவர்கள் அனுபவிக்க முடியும்.

1ஆம் பக்கத் **சர்வதேச மகளிர் தின...**

பெண்கள் அமைப்பு மற்றும் தொழிற்சங்கமாக, 2025 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் டாபிந்து கூட்டமைப்பாகிய நாம் தொழிற்சாலைகள், பெருந்தோட்டங்கள், விவசாய நிலங்கள் மற்றும் கடல் மற்றும் அதன் எல்லைகளுக்கு அப்பால் பெண்களின் உழைப்புக்கு மரியாதை, பாதுகாப்பு, அன்பு, உரிமைகள் மற்றும் சமத்துவம் மேம்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம். இதை முன்னிலைப்படுத்தி சமூக ஊடகங்களில் நாங்கள் வெளியிட்ட சர்வதேச மகளிர் தின அறிக்கையும், அமைதிப் பேரணியின் போது பெண்களுக்கு உரித்தாக வேண்டிய உரிமைகள் பற்றி செய்திப் பலகைகளில் காட்சிப்படுத்தப்பட்டதும் இதன் பாராட்டத்தக்க அம்சங்களாகும்.

பெண்களின் வலிமை, அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்புகள் மூலம் சமூகம், பொருளாதாரம் மற்றும் குடும்ப வாழ்க்கை அர்த்தமுள்ளதாகவும் மரியாதைக்குரியதாகவும் இருப்பதால், பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் அவர்களின் சமத்துவத்தை உறுதி செய்வதும் ஒவ்வொரு சமூகத்தினதும் அவசியமாகும். எனவே, டாபிந்து கூட்டமைப்பாகிய நாம், பெண்களைக் கைவிட்ட உலகளாவிய நவதாராளவாத ஆட்சியைத் தாண்டிப் போராடுவதற்கும், ஒவ்வொரு மட்டத்திலும் பெண்களின் கூட்டு சக்தியையும் அவர்களின் பங்களிப்புகளையும் மதிக்கும் ஒரு உலகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் உறுதிபூண்டுள்ளோம்.








# பாரம் சுமக்கும் பெண்கள்

தெய்வங்களையும், அசுரர்களையும் மையமாகக் கொண்ட ஒவ்வொரு கதையிலும், பெண்கள் ஒவ்வொரு நாளும் அசுரர்களையும் தெய்வங்களையும் எதிர்த்துப் போராடுகிறார்கள். உண்மையில், அவர்களை சமூகத்தின் முதுகெலும்பாகக் காணலாம். அவர்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும் தொழில் வாழ்க்கையிலும் சவால்களை சமாளித்து முன்னேற முயற்சி செய்கிறார்கள். ஒரு பெண் எப்போதும் தன் வீட்டில் மகிழ்ச்சியையும் அமைதியையும் வளர்க்கின்றாள். அவர்கள் தங்களுக்கென ஒரு தொழில் வாழ்க்கையையும் உருவாக்க போராடுகிறார்கள். அன்றாட வாழ்வில் பல்வேறு ஏற்ற தாழ்வுகளைச் சந்தித்த பெண்கள், அழகான மரங்களைப் போல மீள்தன்மையை வெளிப்படுத்துகிறார்கள். சில சமயங்களில் மகளாகவும், சில சமயங்களில் மனைவியாகவும், சில சமயங்களில் தாயாகவும், சில சமயங்களில் இல்லத்தரசியாகவும் பல்வேறு வேடங்களில் சித்தரிக்கும் ஒரு புரட்சிகரமான கதாபாத்திரமாகவும் அவளைக் காணலாம். ஆனால் அவள் செய்யும் தியாகங்கள் பாராட்டப்படுகிறதா? என்பதுதான் கேள்வி.

பல பெண்கள் சிறு வயதிலிருந்தே பொறுப்பானவர்களாக இருக்கிறார்கள். மேலும், பெண் தனது சொந்த துன்பத்தை அடக்கி, தனது சொந்த மன நலனைப் பற்றி சிந்திக்காமல், மற்றவர்களின் நலனுக்காக பாடுபடுகிறாள்.

இது இலங்கை சமூகத்திலுள்ள பெண்களுக்கு மட்டுமே பொதுவானது. அவள் மற்றவர்களுக்கான தனது பொறுப்புகளை நிறைவேற்ற போராடுகிறாள், பல கஷ்டங்களை கனத்த இதயத்துடன் தாங்குகிறாள். ஆனால் அவளுடைய மன நலத்தை விட ஏனைய அனைத்தும் முக்கியமானதா? என்பதுதான் கேள்வி. எரிந்த மரங்கள் கூட இறக்காமல் இலைகள் உதிரும் காலம் வரும். வாழ்க்கையும் அப்படித்தான். "ஒரு நாள், இலைகள் பூக்கும் வசந்த காலம் வரும்". பெண்கள் என்போர் சமூகத்தின் வலிமையும் அழகும் ஆவார்கள், அவர்களின் தியாகங்கள், அவர்களின் புத்திசாலித்தனம் மற்றும் சமூகத்திற்கு அவர்கள் செய்யும் சேவை ஆகியவை நிரூபிக்கப்பட வேண்டும். அவர்கள் தங்கள் தன்னம்பிக்கையுடனும் அர்ப்பணிப்புடனும் தங்கள் வாழ்க்கையை உருவாக்குகிறார்கள், அவர்களுக்கு உரிய மரியாதை, பாதுகாப்பு மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டாமா?

பெண்களாகிய நமது சுதந்திரத்திற்கான புகலிடமாக கல்வியைக் காணலாம். தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படும் அழுத்தங்கள் மற்றும் கஷ்டங்களிலிருந்து விடுபட்டு, அவர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப அவர்களின் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகளை வழங்கும் ஒரு அற்புதமான புகலிடமாக இதைக் காட்டலாம். இது பெண்கள் ஆண்களைப் போலவே சமூகத்தில் சமமான மதிப்பைப் பெறுவதற்குத் தேவையான திறன்களையும் மனநிலையையும் பராமரிக்க உதவுகின்றது.

இலங்கையில் பெண்கள் அரசியல், வணிக சங்கங்கள் அமைப்புகளின் தலைவர்களாக பணியாற்ற முன்வந்துள்ள நிகழ்வுகள் வரலாற்றில் இன்றும் காணப்படுகின்றன. பெண்களின் குணாதிசயங்களை சமூகத்தில் ஒரு சக்திவாய்ந்த அங்கமாகக் காணலாம் என்பதை நான் முன்பே குறிப்பிட்டுள்ளேன். தன்னம்பிக்கை, சுறுசுறுப்பு, தைரியம் ஆகியவற்றை இதற்குக் காரணங்களாகக் கூறலாம். நம்பிக்கையும் ஊக்கமும் அவர்களின் உள் வலிமையை வெளிக்கொணர உதவும்.

கவீஷா வன்னிநாயக்க



# அவள்

பழங்காலத்திலிருந்தே பெண்களைப் பற்றிய பல விடயங்களை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்தப் பண்டைய கால கலாச்சாரத்தின்படி, அவளுடைய அழகின் நிறம் பல்வேறு வான உடல்களுடன் ஒப்பிடப்பட்டது. கடந்த காலங்களை உற்று நோக்கும் போது, பௌத்த மதத்தில் அவள் ஆரம்பத்திலிருந்தே சிறந்த சேவையைச் செய்துள்ளாள். ஆனால், நம் சமூகம் அவளைச் சரியாகப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டது. அவளைப் பற்றி சிந்திப்பதற்கு நாம் வருடத்தில் ஒரு நாளை மட்டும் நாம் ஒதுக்கினாலும், ஒவ்வொரு நாளும் அவளைப் பற்றி தேடிப் பார்ப்பது எமது கடமையாகும். ஆனால் இன்றைய சமூகத்தினுள் தினமும் நடக்கும் குற்றச் செயல்களே இதற்குக் காரணமாகும். உலகிற்கு உயிர் கொடுப்பவள் அவள்தான். ஆயிரம் சுமைகளைத் தாங்கி வாழ்க்கைக் கப்பலை அவள் இயக்குகின்றாள்.

உலகெங்கிலும் உள்ள அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக அனைத்து பொது மற்றும் தனியார் துறைகளிலும் நிகழும் வன்முறை, பாலியல் சுரண்டல் மற்றும் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை தற்போது நம் நாட்டிலும் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளது. நாட்டினுள் இடம்பெறும் வெவ்வேறு பெயர்களைக் கொண்ட போதைபொருள் பாவனைதான் இதற்கு முதன்மையான காரணமாகும். எனவே, நாம் குழந்தைகளின் பராமரிப்பில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இன்றைய சமூகத்தில், எந்தத் துறையிலும் ஆண்களுடன் போட்டியிட்டு, ஆண்களுடன் இணைந்து பணியாற்றும் திறன் தற்போது மேலோங்கி உள்ளது. இந்த வருடம் சர்வதேச மகளிர் தினத்தன்று, பெண்ணைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விமானமொன்று புறப்படுவதை நாம் காணக்கூடியதாக இருந்தது. இன்றைய பெண்கள் முன்பை விட அதிக தைரியத்துடன் முன்வந்துள்ளனர் என்பதற்கு இது ஒரு சான்றாகும். அரசியல் துறை, வேலைவாய்ப்பு நிர்வாகம், கல்வி, நிர்வாகத் துறைகள் மற்றும் வேலைவாய்ப்புக் கட்டுப்பாட்டுத் துறைகளிலும் பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார்கள்.

இப்போதெல்லாம், நாட்டில் நிலவும் பொருளாதார பணவீக்கம் காரணமாக பெண்கள் மிகவும் பரபரப்பாக இருக்கிறார்கள். தனது தொழிலை செய்யும் அதே நேரத்தில் அவள் அதிகாலையில் எழுந்து இரவு படுக்கைக்குச் செல்லும் வரை வீட்டு வேலைகளைச் செய்கிறாள். அவள் ஒரு தாயாக இருந்தால், குடும்ப முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறாள். அதற்குக் காரணம் அவள் பெற்ற வலிமையும் தைரியமும்தான்.

கடந்த காலத்தில், இந்தியா போன்ற நாடுகளில், பெண் குழந்தை பிறப்பது துரதிர்ஷ்டவசமாகக் கருதப்பட்டது, ஆனால் இன்று அது மறைந்துவிட்டது. நம் நாட்டில் கூட, ஒரு குடும்பத்தில் மூன்று அல்லது நான்கு பெண் குழந்தைகள் காணப்படுவது குடும்பத்திற்கு ஒரு சுமையாகக் கருதப்படுகிறது.

அவள் சில நேரங்களில் ஒரு தோழியாகவும், ஒரு சகோதரியாகவும், ஒரு காதலியாகவும் ஒரு அம்மாவாகவும் பல்வேறு பாத்திரங்களை ஏற்கின்றாள். இன்றைய காலகட்டத்தில் அவள் பல்வேறு பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. மேலும், முன்பை விட தற்காலத்தில் அவள் வீட்டில், பேருந்தில், பணியிடத்தில், புகையிரத வண்டியில் வன்முறைக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆளாகிறாள். சிறுமிகள் கூட துஷ்பிரயோகம் செய்யப்படுகிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள் நாட்டில் பலமுறை நடந்திருந்தாலும், அவற்றுக்கு எதிராக சட்டங்கள் இருந்தாலும், அவை இன்னும் அதிகாரத்திற்கு உட்பட்டவை என்றே சொல்ல வேண்டும்.

இருப்பினும், இன்றைய சமூகத்தில் வாழும் பெண்கள் கல்வித் தகைமையுடையவர்களாகவும், உயர் மட்ட வேலைகளில் பணிபுரிபவர்களாகவும் உள்ளனர். நாட்டின் உயிர்நாடியாக இருக்கும் அவர்களை நாம் முன்பை விட அதிக மரியாதையுடனும் சமத்துவத்துடனும் நடதத வேண்டும் என்றே கூற வேண்டும்.

எச்.ஐ. சமன்மலி

# போசணைமிக்கதோர் உணவு வேளை - பொது சமையலறை

கடந்த தைமாதம் 15ம் திகதியன்று, டாபிந்து கூட்டமைப்பினால், கிளிநொச்சி, வவுனியா மற்றும் கட்டுநாயக்கவில் ஆடைத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காக மூன்று சமூக சமையலறை திட்டங்கள் நடத்தப்பட்டது. முந்நூறு தொழிற்சாலை ஊழியர்களுக்கு போசணைமிக்க சத்தான உணவுப் பொதிகளை விநியோகிப்பதே இதன் நோக்கமாக இருந்தது, இது உணவுப் பாதுகாப்பிற்கு மட்டுமல்லாமல் சமூகங்களுக்குள் பிணைப்புகளை வலுப்படுத்தவும் பங்களித்தது.







# சகோதரத்துவ வட்டம்



ஆடைத் தொழிலில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களின் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார உரிமைகளுக்காக வாதிடும் டாபிந்து கூட்டமைப்பினால் செயல்படுத்தப்படும் சகோதரத்துவ வட்டம் திட்டத்தின் முதல் கட்டமாக, கம்பஹா மாவட்டத்தில் உள்ள கட்டுநாயக்க மற்றும் பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களை அடிப்படையாகக் கொண்டு, தைமாதம் 5ம் திகதி மற்றும் 26ம் திகதி ஆகிய இரு தினங்களில் நடைபெற்றது. டாபிந்து மூலம் உருவாக்கப்பட்ட புதிய தலைமைத்துவத்தின் மூலம் புதிய உறுப்பினர்களைச் சேகரித்து நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில், மாதவிடாய் தொடங்கிய முதல் நாளின் அனுபவங்களைப் பற்றி கலந்துரையாடல் இடம்பெற்றது. முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் பல்வேறு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்த தொழிலாளர்ப் படை காணப்படுவதினால், அவர்களின் முதல் மாதவிடாய் அனுபவமும் சம்பிரதாய ரீதியில் பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தப்பட்டன. இந்தப் பழக்கவழக்கங்கள் என்ன? அந்தப் பழக்கவழக்கங்களின் அடிப்படை என்ன? அந்தப் பழக்கவழக்கங்கள் எவ்வாறு உருவாகின்றன? மற்றும் நிலவும் பல்வேறு கருத்துக்கள் ஆகியவை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டன.

சகோதரத்துவ வட்டத்தின் இரண்டாவது கட்டமானது, மாசி மாதம் 9ம் திகதி கட்டுநாயக்க மற்றும் பியகமவில் நடைபெற்றது. இங்கு, மாதவிடாய் என்றால் என்ன?, மாதவிடாய் எவ்வாறு நிகழ்கிறது? என்பது போன்ற அடிப்படைத் தகவல்கள் வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்கப்பட்டன, மேலும் மாதவிடாயின் போது பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் மாதவிடாயின் போது ஏற்படும் வலிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. மாதவிடாய் மேலாண்மை மற்றும் குடும்பம், பணியிடம் மற்றும் சமூகத்திலிருந்து பெறப்பட்ட ஆதரவு குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இதன் மூன்றாவது கலந்துரையாடல் பங்குனி 2ம் திகதி கட்டுநாயக்க மற்றும் பியகமவில் நடைபெற்றது. அங்கு, பெண் இனப்பெருக்க அமைப்பின் பாகங்கள், கன்னித்தன்மை மற்றும் கன்னித்திரை பற்றிய நம்பிக்கைகள் மற்றும் மாதவிடாய் பொருட்கள் குறித்து விளக்கக் கலந்துரையாடல் இடம்பெற்றது.



# சுகாதார திறன் மேம்பாட்டு பட்டறைகள்



மேலும் கிராஸ்ரூட்ஸ் அறக்கட்டளையின் இயக்குனர் பபா தேசப்பிரிய அவர்கள் வளவாளராகப் பங்குபற்றினார்.

கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் நடைபெற்ற இந்த சுகாதாரத் திறன் மேம்பாட்டுப் பட்டறையின் முதல் பயிற்சி அமர்வை, கிளிநொச்சி சுகாதார மருத்துவ அதிகாரி, பெண்கள் மற்றும் குழந்தைகள் பிரிவின் வைத்தியர் ஏ. டிரோனி அவர்களால் நடத்தப்பட்டது. வடக்குப் பிராந்தியத்தில் கிராமப்புற மட்டத்தில் நடைபெறும் சகோதரத்துவ வட்ட கலந்துரையாடலின் ஆரம்ப கட்டம் இதுவாகும்.

இலங்கையில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களின் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார உரிமைகள் மற்றும் கண்ணியத்திற்காக வாதிடும் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட சுகாதாரத் திறன் மேம்பாட்டுப் பட்டறைகளின் மூன்றாவது மற்றும் நான்காவது செயலமர்வுகள் கடந்த மாசி மாதம் 16ம் திகதி மற்றும் பங்குனி மாதம் 09ம் திகதிளில் கட்டுநாயக்க மற்றும் பியகம சுதந்திர வர்த்தக வலயங்களில் நடைபெற்றன. மாதவிடாய் நாள், மாதவிடாய் சுழற்சியுடன் தொடர்புடைய செயல்முறைகள், ஒரு பெண்ணின் வளமான காலம், மாதவிடாய் மேலாண்மை மற்றும் சுகாதாரம் ஆகியவை பற்றி பல்வேறு செயல்பாடுகள் மூலம் கலந்துரையாடப்பட்டது.



# தொழிலாளர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு திட்டம்

கடந்த மார்ச் 2ம் திகதி, கிளிநொச்சியில் ஆடைத் தொழிற்துறையில் பணிபுரியும் 25 ஊழியர்களுக்கு தொழிலாளர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த செயலமர்வை வழக்கறிஞர் திருமதி சரணியா ராசுதன் நடத்தினார். தொழிலாளர் சட்டம், தொழிலாளர் சட்டத்தை அமல்படுத்தும் நீதிமன்றங்கள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் மீறப்பட்டால் என்ன செய்வது? என்பது குறித்து ஆழமான கலந்துரையாடல் இடம்பெற்றது.



# அம்னெஸ்டி இன்டர்னெஷனல் அமைப்பு பொதுச் செயலாளரின் இலங்கை விஜயம்



கடந்த மாசி மாதம் 28ம் திகதியன்று, அம்னஸ்டி இன்டர்நேஷனல் பொதுச்செயலாளர் ஆக்னஸ் கார்ல் மார்ட் அவர்கள் தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர் உரிமை அமைப்புகளைச் சந்திப்பதற்காக தமது இலங்கை விஜயத்தை மேற்கொண்டார். அவர் தனது வருகையின் போது, வாழ்க்கைச் செலவுக்கான ஊதியமின்மை, பாலின ஊதிய இடைவெளி, தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடும் அமைப்புகள் உள்ளிட்ட பல பிரச்சினைகளை அவர் முன்வைத்தார். மருத்துவ அனுமதியின்றி மாதவிடாயை தாமதப்படுத்தவும் மன அழுத்த நிவாரணம் அளிக்கவும் தொழிலாளர்களுக்கு மாத்திரைகளை வழங்கும் தொழிற்சாலைகளின் உரிமை மீறல், பெண் தொழிலாளர்களைத் துன்புறுத்துதல் மற்றும் தொழிற்சங்கம் அமைக்கும் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் போன்ற பிரச்சனைகள் குறித்து டாபிந்து கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டது. போக்குவரத்து போன்ற பெண்களின் பாதுகாப்புத் தேவைகளை வழங்கும் தொழிற்சாலைகள் மீதான கட்டுப்பாடுகளை மேற்கோள் காட்டி, டாபிந்து கூட்டமைப்பசை சேர்ந்த சமிலா துஷாரி, சமூக அந்தஸ்தின் அடிப்படையில் ஊதிய இடைவெளிகள் குறித்த பிரச்சினையைப் பற்றி தமது கருத்துக்களை தெரியப்படுத்தினார். தொழிலாளர் கொள்கைகளை அமைக்கும் போது, கவனியாது விடும் ஊதியம் இல்லாத பராமரிப்புப் பணிகளில் உள்ள பெண்களின் அங்கீகரிக்கப்படாத பங்களிப்பையும் அவர் எடுத்துரைத்தார். கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் உள்ள தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தமிழினம் அடிப்படையாகக் கொண்ட பாகுபாட்டிற்கு எதிராகவும் அவர் பேசினார். இந்தப் பயணத்தின் மூலம், சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பான அம்னஸ்டி இன்டர்நேஷனல், இலங்கையில் பணிபுரியும் பெண்கள் தொடர்ந்து எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பான தமது கவனத்தை செலுத்தியது.

# க்ரியா அமைப்பு மற்றும் டாபிந்துவின் பெண்ணிய செயல்பாட்டின் அனுபவப் பகிர்வு

தெற்காசியாவிற்கான பெண்கள் தலைமைத்துவம், தொழில்முனைவோர் மற்றும் உரிமைகள் நிறுவனத்தின் (CREA) பங்கேற்பாளர்களை டாபிந்து வரவேற்றது. இலங்கையில் மற்றும் வர்த்தக வலய பெண்கள் மற்றும் தொழிலாளர் இயக்கத்தில் டாபிந்துவின் நீண்ட கால செயல்பாட்டு வரலாற்றை டாபிந்து பகிர்ந்து கொண்டது. தெற்காசியாவில் பெண்ணிய செயல்பாடு குறித்த கருத்துக்களையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ள இந்த சந்திப்பு ஒரு புத்துணர்வுமிக்க தளத்தை வழங்கியது.



# சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்கள்

2025ம் ஆண்டு பங்குனி 7ம் திகதியன்று, இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தின் சர்வதேச மகளிர் தின கொண்டாட்டத்தில் டாபிந்து பங்கேற்றது. கிராமப்புற பொருளாதாரம், தொழிலாளர் உரிமைகள் மற்றும் பாலின பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பெண்களின் போராட்டங்களைப் பகிர்ந்து கொள்ள இந்த நிகழ்வு ஒரு தளத்தை வழங்கியது. இந்தத் துறைகளில் பெண்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்களைப் பற்றி பங்கேற்பாளர்கள் கலந்துரையாடினர். பாலின சமத்துவமின்மையானது, ஏனைய சமூகப் பிரச்சினைகளுடன் எவ்வாறு குறுக்கிடுகிறது என்பதை எடுத்துக்காட்டினர்.

சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடுவதற்காக, ஏனைய தொழிலாளர் அமைப்புகளுடன் இணைந்து, டாபிந்து கூட்டமைப்புடனான வலுவான ஒற்றுமைக் காட்சியை கட்டுநாயக்கப் பகுதி கண்டது. பெண் வீட்டுத் தொழிலாளர்களின் முக்கியமான பிரச்சினைகள் மற்றும் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் வலுவான பகல்நேர பராமரிப்பு வசதிகளின் அவசரத் தேவையை






எடுத்துக்காட்டும் நடைப்பயணத்தை உள்ளடக்கியதாக RED அமைப்பின் கொண்டாட்டத்துடன் இந்த நாள் தொடங்கியது. பின்னர் ஷ்ரமபிமானி கேந்திரயவின் மகளிர் தினக் கொண்டாட்டத்தில் டாபிந்து பங்குபற்றியது. அங்கு டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறை குறித்த நாடகம் மூலம் ஊழியர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு சிறந்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ஆடைத் தொழிலாளர்களுக்கு போதுமான வாழ்க்கை ஊதியம் இல்லாததன் உலகளாவிய பிரச்சினையை எடுத்துக்காட்டும் ஒரு குறும்படத்தை ஸ்டாண்ட் அப் மூவ்மென்ட் லங்கா வெளியிட்டது. அதன்பின்னர், டாபிந்துவினால் மேற்கொள்ளப்பட்ட அமைதிப் பேரணியுடன் அந்த நாளுக்கான நிகழ்வுகள் இனிதே நிறைவுபெற்றன. இந்த முயற்சிகள் எல்லா இடங்களிலும் பெண் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மகளிர் தினமாக இருந்தன.

# தெற்காசிய கடன் நீதி மாநாடு

சட்டவிரோதக் கடனை ஒழிப்பதற்கான குழு (CADTM) 2025 தை 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் தெற்காசியக் கடன் நீதி குறித்த மாநாட்டை நடத்தியது. இலங்கையில் பொருளாதார நீதிக்கான பெண்ணியக் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் டாபிந்து கூட்டமைப்பைச் சேர்ந்த மதுலிகா குணவர்தன, இலங்கையில் நடந்து வரும் கடன் நெருக்கடி குறித்த பெண்ணிய பகுப்பாய்வை வழங்கினார். அவரது விளக்கக்காட்சி, விளிம்புநிலைப் பெண்களின் வாழ்க்கை அனுபவங்களை எடுத்துக்காட்டி, கடன் நெருக்கடி பெண்களின் பொருளாதார நல்வாழ்வை எவ்வாறு விகிதாசாரமாகப் பாதிக்கிறது மற்றும் நாடு முழுவதும் பொருளாதார சமத்துவமின்மையை எவ்வாறு அதிகரிக்கிறது என்பதை வலியுறுத்தினார்.




# நமது உரிமைகள் பற்றி அறிந்து கொள்வோம்

தொழிலாளர் உரிமைகள் என்பது, மனித உரிமைகள் எனப்படுவதுடன் அனைத்து மனிதர்களும் சுதந்திரமாகவும், கண்ணியத்திலும் உரிமைகளிலும் சமமாகவும் பிறக்கிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு அரசாங்கங்களும் அங்கீகரிக்கின்றன. அதன்படி, இலங்கை தொழிலாளர் சட்டத்தின் கீழ், குறைந்தபட்ச ஊதிய அளவுகள், பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச்சூழல்கள், விடுமுறை மற்றும் பொது விடுமுறைகள், ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஊழியர் அறக்கட்டளை நிதிகள், இழப்பீடு, மேலதிக நேர கொடுப்பனவுகள் மற்றும் தொழிற்சங்கத்தை உருவாக்கி அதில் இணையும் உரிமை உங்களுக்கு உள்ளது. இந்த ஆக்கமானது, ஆடைத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் விடுமுறை உரிமைகளைப் பற்றி விவாதிக்கிறது. இலங்கையில், ஆடைத் தொழில் தொழிலாளர்களின் விடுப்பு உரிமைகள் முக்கியமாக குறிப்பிடுகின்றது. ஊதிய வாரிய கட்டளைச் சட்டத்தால் நிர்வகிக்கப்படுகின்ற இது, தொழில்துறை சார்ந்த தொழிலாளர் விதிமுறைகளை வகுக்கிறது. அதன்படி,

## வருடாந்த விடுமுறை

ஒரு வருட சேவையை முடித்த பிறகு, பணியாளர்கள் 14 நாட்கள் ஊதியத்துடன் கூடிய வருடாந்த விடுமுறைக்கு உரித்துடையோர் ஆகின்றனர். முதல் ஆண்டில், பூர்த்தி செய்யப்பட்ட மாதங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வருடாந்த விடுமுறை கணக்கிடப்படுகிறது. இது 4 முதல் 14 நாட்கள் வரை இருக்கும்.

- ஜனவரி 1ஆம் திகதி அல்லது அதற்குப் பிறகு ஆனால், ஏப்ரல் 1ஆம் திகதிக்கு முன் வேலைவாய்ப்பை தொடங்கினால்: 14 நாட்கள்.
- ஏப்ரல் 1ம் திகதி அல்லது அதற்குப் பிறகு ஆனால், ஜூலை 1ம் திகதிக்கு முன் வேலைவாய்ப்பை தொடங்கினால்: 10 நாட்கள்.
- ஜூலை 1ம் திகதி அல்லது அதற்குப் பிறகு ஆனால், அக்டோபர் 1ம் திகதிக்கு முன்பு வேலைவாய்ப்பை தொடங்கினால்: 7 நாட்கள்.
- அக்டோபர் 1ம் திகதி அல்லது அதற்குப் பிறகு வேலைவாய்ப்பு தொடங்கினால்: 4 நாட்கள்.

## அரசாங்க விடுமுறை நாட்கள்

ஆடைத் தொழிலாளர்கள் அரசின் 8 சட்டப்பூர்வ பொது விடுமுறை நாட்களையும் பெற உரிமை உண்டு. அவை தமிழ் தைப் பொங்கல் தினம், தேசிய தினம், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு (இரண்டு நாட்கள்), மே தினம், வெசாக் பௌர்ணமி போயா தினம் (இரண்டு நாட்கள்) மற்றும் கிறிஸ்துமஸ் தினம். ஒரு ஊழியர் பொது விடுமுறை நாளில் வேலை செய்ய நேரிடுமாயின், அவருக்கு இரு மடங்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும் அல்லது மாற்று நாள் விடுமுறை அளிக்கப்பட வேண்டும்.

## மேலதிக விடுமுறை

தனிப்பட்ட காரணங்களுக்காகவோ அல்லது அவசரநிலைகளுக்காகவோ ஆடைத் தொழிலாளர்கள் வருடத்திற்கு 7 நாட்கள் கூடுதலாக விடுமுறை பெற உரிமை உண்டு. மேலதிக விடுமுறை அடுத்த ஆண்டு வரை எடுத்துச் செல்ல முடியாது.

## மகப்பேறு விடுப்பு

ஆடைத் தொழிலில் பணிபுரியும் பெண்கள் தங்கள் முதல் மற்றும் இரண்டாவது குழந்தைக்கு 84 நாட்கள் ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுமுறைக்கு உரிமை உண்டு. மூன்றாவது குழந்தை மற்றும் அதற்கு மேல் இருந்தால், அவர்களுக்கு 42 நாட்கள் ஊதியத்துடன் கூடிய விடுமுறை மட்டுமே கிடைக்கும். இதில் அந்தக் காலகட்டத்தில் வார இறுதி நாட்களும் பொது விடுமுறை நாட்களும் அடங்கும்.

# சிந்தனை

காதலர் தினம் எமது நாட்டிற்கு தோற்றம் பெற்றது, வெளிநாட்டிலிருந்து ஆகும். அந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 14 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. நம் நாட்டில் காதலர்கள் சிவப்பு நிற ஆடைகளை அணிந்து, அதன் மீது இரண்டு இதயங்களை வரைந்து, அதன் வழியாக ஒரு அம்பு எய்து, சிவப்பு பூங்கொத்தை ஏந்தி, காதல் பறவைகள் தங்கள் காதலியைப் பார்க்கப் பறப்பது போல, மே தின அணிவகுப்புக்குச் செல்வது போல செல்கிறார்கள்,. அந்த நாட்களில், கடைகளில் நிறைய சிவப்பு நிற ஆடைகளும் பரிசுப் பொருட்களும் இருக்கும். இவற்றைச் சுமந்துகொண்டு, காதலர்கள் தங்கள் அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்த தங்கள் காதலியைத் தேடி பறக்கிறார்கள். பின்னர் அவர்கள் ஒதுக்குப்புறமான இடங்களைத் தேடிச் சென்று, தங்கள் வாழ்நாள் முழுவதும் தமது காதல் கீதங்களையும், காதல் கவிதைகளையும் புலம்புகிள்றார்கள். ம்ம்ம்... தற்காலத்தில் அவ்வாறு நடந்தால் எவ்வளவு அற்புதமாக இருக்கும்?

ஆனால் நாட்டின் தற்போதைய சூழ்நிலையைப் பார்க்கும்போது, அவ்வாறு நடக்கிறதா? திருமணத்திற்கு முன்பு, அவர்கள் கனவுப் பாடல்களை நினைத்து அவர்கள் “கண்ணிரண்டில் மோதி நான் விழுந்தேனே... காரணம் இன்றியே நான் சிரித்தேனே... என்மனதும் ஏனோ என்னிடம் இல்லை...“ என உண்மைக் காதல் காவியங்களைப் போல் இருப்பார்கள். பின் சிறிது காலத்தின் பின்னர் போ நீ போ தனியாகத் தவிக்கின்றேன் துணை வேண்டாம் அன்பே போ... நீதொட்ட இடமெல்லாம் எரிகிறது அன்பே போ என வேதனையில் இருப்பார்கள். இங்கு காதல் பாடல்களும் உண்டு, காதல் முறிவுப் பாடல்களும் உண்டு. இந்தக் காதல் உலகம் மறைந்த பிறகு, சிலர் ஆடம்பரமான ஹோட்டல்களில் திருமண வாழ்க்கையில் நுழைகிறார்கள். தாங்கள் வாழும் வரை ஒரே கூரையின் கீழ் வாழ்வோம் என்று பதிவாளரிடம் சத்தியம் செய்கிறார்கள். பின்னர் கூட்டில் குஞ்சு பொரித்த குஞ்சுகள் பெற்றோரின் கண்களில் இருந்து வழியும் கண்ணீருக்கு மத்தியில் பறந்து செல்கின்றன. ஆனால் இன்றைய விவாகரத்து வழக்குகள் பல திருமணங்கள் தோல்வியடைந்திருப்பதைக் காட்டுகின்றன. திருமணத்திற்கு முன்பு பேசிய இனிமையான வார்த்தைகள் இப்போது கசப்பாக மாறிவிட்டன. காதல் உலகமும் மறைந்துவிட்டது. பாடிய காதல் பாடல்கள் வெற்றி பெற்றுள்ளன. முரண்பாட்டின் பாடல்களும் உள்ளன. திருமணத்திற்கு முன்பு பாடிய பாடல்கள், கூறிய வார்த்தைகள் மாறிவிட்டன. ஆரம்பத்தில் பேசப்பட்ட இனிமையான வார்த்தைகள், குடும்பத்திற்குள் ஏற்பட்ட நிதிப் பிரச்சனைகளால் கசப்பாக மாறிவிட்டன. நான் முன்பு பார்த்த நீல நிறக் கண்கள் இப்போது மங்கலாகிவிட்டன. வீட்டில் உள்ள குறைகளைப் பற்றி கோபமாகப் பேசுவது. பிறகு அவர் கோபமடைந்து, “நீ அதிகமாகப் பேசுகிறாய், உன் பற்களைப் பிடுங்கிக் கொள்” என்று கூறுகிறார். அவர் இப்போது கணவர் இல்லை. ஒரு பல் மருத்துவர். ஆரம்பத்தில் அன்புடன் முத்தமிட்ட மானை அவன் தாக்கும்போது, அவன் தொண்டை மற்றும் மூக்கிற்கு சிகிச்சையளிக்கும் ஒரு மருத்துவர் அல்லது ஒரு பொது பயிற்சியாளர். இதற்கு மேல் தாங்க முடியாமல், அந்தப் பெண், ”என் கைகால்களை உடைக்கப் பார்க்கிறாயா? என்னை அடித்தால், நானும் உன்னை அடிப்பேன்” என்று கூறுகிறார். பிறகு அவர்கள், ”உங்கள் தாய்மார்கள் ஆண்களிடம் கையை உயர்த்தக் கற்றுக் கொடுத்தார்களா? ஆண்களிடம் கையை உயர்த்துவது பாவம்” என்று கூறுகிறார்கள். பின்னர் பெண்கள், ”அப்படியானால் நீங்கள் உங்கள் கைகளை மட்டுமல்ல, உங்கள் கால்களையும் உயர்த்தி, எலும்புகளையும் முறிக்கின்றீர்கள்” என்று கூறுகிறார்கள். இப்போது, காதல் கதைகள் குழந்தைத்தனமாகிவிட்டன, ஆரம்பத்தில் பிணைக்கப்பட்ட ஒரு காதலின் இனிமையை இப்போது தேடவேண்டியுள்ளது.

சமந்தினி

# கவிதைப் பக்கம்

தையல் மேசையின் ராணி
வெளிச்சம் இல்லா விடியலிலும்,
வேலைக்காக எழுகிறாள்,
விரல்களில் நூல் சிக்கினாலும்,
விரக்தி வந்து நின்றதில்லை.

நாணயம் தேடும் தையலினால்,
நாளை கனவு நெய்கிறாள்,
தன் உழைப்பில் ஒளி புனைந்து,
தரணியையே உயர்த்துகிறாள்.

பட்டு, பருத்தி, மெழுகு நூல்,
பயணிக்கின்றன அவள் கைபடியில்,
அழகை தீட்டும் தொலைநோக்கில்,
அவள் அரிய வார்த்தை உழை!

மகளிர் தினம் கொண்டாடிட,
மனமார வாழ்த்துகிறேன்,
தையல் மேசையின் ராணிக்கு,
மகளிர் தின வாழ்த்துக்கள்!

சுரம்யா



# ஜெனீவாவில் நடைபெற்ற 90வது CEDAW சபைக் மாநாட்டில் டாபிந்துவின் பங்கேற்பு




2025 மாசி மாதம் 14ம் திகதியன்று, இலங்கை அரசாங்கம் அதன் 90வது அமர்வில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு ஒழிப்புக்கான குழுவிடம் (CEDAW) அதன் ஐந்தாண்டு பெண்கள் நிலைமைகள் குறித்த அறிக்கையை சமர்ப்பித்தது, அங்கு அது பெண்கள் உரிமைகள் தொடர்பான முக்கிய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியது. பெண்கள் மற்றும் ஊடக அமைப்பு, டாபிந்து கூட்டமைப்பு உட்பட 12 பெண்கள் அமைப்புகளுடன் இணைந்து, பெண்களின் பொருளாதார உரிமைகள் மற்றும் வேலைவாய்ப்பில் சமத்துவம் பற்றி கலந்துரையாடும் மாநாட்டின் 11, 12, 13 மற்றும் 14 பிரிவுகளை மையமாகக் கொண்ட ஒரு விரிவான அறிக்கையைத் தொகுத்தது.

ஆடைத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகள், குறிப்பாக அவர்களின் தொழிலாளர் உரிமைகள் குறித்து அறிக்கையை சமர்ப்பித்த சமிலா துஷாரி அவர்கள், சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடந்த (CEDAW) மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றார். தொழிலாளர்களின் வாழ்க்கைக்கு ஏற்ற ஊதியமின்மை, தொழிற்சங்கத்தை களைத்தல் மற்றும் சங்க சுதந்திரத்தை அடக்குதல் ஆகியவை தொடர்பிலும், பொருளாதார மற்றும் கடன் நெருக்கடி மற்றும் பெண்கள் மீதான அதன் தாக்கம் பற்றியும் அறிக்கையொன்றை ஆவணப்படுத்தியது.

மேலும், தொழிற்சங்கங்களுக்குள் பெண் தலைமைத்துவம் இல்லாததையும், கொள்கை வகுக்கும் செயல்முறையையும் இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது, தொழிலாளர் இயக்கத்தில் பெண்களின் குரல்கள் மூழ்கடிக்கப்படுகின்றன. இதற்கு பதிலளிக்கும் விதமாக, இலங்கை அரசாங்கம் CEDAW ஐ செயல்படுத்துவது குறித்த ஐந்து ஆண்டு அறிக்கையை வழங்கியது. வேலை உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்தலை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு முக்கிய சர்வதேச தொழிலாளர் தரநிலையான மாநாடு எண் 190 (C190) ஐ அங்கீகரிப்பதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை அறிவித்தமை இந்த செயற்றிட்டத்தின் குறிப்பிடத்தக்க சாதனையாக இருந்தது. பாலின சமத்துவத்தை முன்னேற்றுவதற்கும், பணியிடத்தில் பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும் இலங்கையின் உறுதிப்பாட்டில் இந்த நடவடிக்கை ஒரு முக்கியமான மைல்கல்லைக் குறித்தது.



# துணிச்சலான பெண்கள் நாட்டிற்கு ஒரு வரப்பிரசாதம்

நாம் அன்றாடம் உட்கொள்ளும் உணவில் பெரும்பகுதி வீணாகிறது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. மேலும், இலங்கை நிலம் வளத்தின் புகலிடமாகும். எனவே, வளமான நிலங்களில் மருத்துவ மூலிகைகள் மற்றும் பல தாவரங்கள் வளர்ந்துள்ளன. அவை முறையாகப் பயன்படுத்தப்படுகின்றனவா? என்பதுதான் பிரச்சினை. இன்றைய கதை, நம்மிடம் இருப்பதைப் பாராட்டி, எல்லோரிடமிருந்தும் அதிகமானதைப் பெற முடிந்த ஒரு துணிச்சலான நபரைப் பற்றியது. அவள் பெயர் மாலிதி பிரியதர்ஷனி, மிஸர தயாரிப்புகளின் நிறுவனர். அவர் குருநாகல் பகுதியைச் சேர்ந்தவர், இயற்கை தாவரங்களைப் பயன்படுத்தி தனது தொழிலை நடத்துகிறார்.

வலிமை மற்றும் அதிகாரமளிப்பை எடுத்துக்காட்டும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வாழ்க்கைக் கதையை அவள் கொண்டிருக்கிறாள். அவர் 2003 முதல் 2011 வரை ஒரு ஆடைத் தொழிற்சாலை ஊழியராகப் பணியாற்றினார், அந்த நேரத்தில் அவர் டாபிந்து கூட்டமைப்புடன் நல்ல உறவையும் வளர்த்துக் கொண்டார். டாபிந்து கூட்டமைப்பு என்பது இலங்கையில் தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் ஆடைத் தொழிலாளர்களுக்கு அதிகாரம் அளிக்கும் ஒரு புகலிடமாகும். அதில் உறுப்பினராக சேர்ந்தது மாலிதியின் வாழ்க்கையை மாற்றியமைத்து, அவள் வாழ்க்கையில் புதிய நம்பிக்கையைக் கொண்டு வந்த இடமாகும்.

தனது தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக, அவர் 2013 ஆம் ஆண்டு கட்டுநாயக்க பகுதிக்கு ஒரு ஆடைத் தொழிற்சாலை ஊழியராக வந்தார். வியர்வைத் துளிகளின் மற்றும் கண்ணீரின் மதிப்பை உணர்ந்து, அவற்றை முத்துக்களாக மாற்ற உதவும் டாபிந்து கூட்டமைப்புடன் அவர் கைகோர்த்தார். அவள் தனது உரிமைகள் பற்றிய புரிதலையும், பல்வேறு சுயதொழில் வாய்ப்புகள் பற்றிய அறிவையும் பெற்றாள். இந்த அனுபவங்கள் மாலிதிக்கு முடிவெடுக்கும் திறன் மற்றும் தலைமைத்துவம் போன்ற குணங்களை வளர்க்க உதவியது.

அவரது தொழிலின் முதல் தயாரிப்பாக அவள் ஹீன் போவிடியா தேநீர் பாக்கெட்டுகளை தயாரித்தாள். அவர் இந்தத் தொழிலை மேற்கொள்ள முக்கிய காரணம், அவர் வசிக்கும் பகுதியில் உள்ள பலர் நீரிழிவு மற்றும் கொழுப்பு போன்ற தொற்றாத நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், அவரது கணவரின் தாயாருக்கும் இதே போன்ற நோய்கள் இருந்ததால், அதை ஓரளவு குறைக்கும் ஒரு தீர்வாக இதை அறிமுகப்படுத்தினார்.

இந்த உலர்த்தும் செயல்முறை மூலம் அவள் இந்த தயாரிப்புகளை உருவாக்குகிறாள். தாய் ஸ்ரீ நிறுவனம் மூலம் உலர்த்தும் செயல்முறை குறித்த பயிற்சி கிடைக்கப்பெற்றதாக அவள் எங்களுடன் பகிர்ந்து கொண்டாள். அவரது தயாரிப்புகளில் நீல தாமரை, நீல நீர் லில்லி, முருங்கை மற்றும் பப்பாளி போன்ற பல பிற தயாரிப்புகளும் அடங்கும். நோயற்ற ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதே இந்த செயற்றிட்டத்தின் நோக்கம் என்று அவள் கூறினாள்.

அவளைப் பொறுத்தவரை, சுயதொழில் மூலம் சமூக சேவையை மேற்கொள்ள முக்கிய காரணம், டாபிந்து கூட்டமைப்புடன் இணைந்து பணியாற்றுவதே ஆகும். அவள் உண்மையிலேயே ஒரு துணிச்சலான பெண். பெண்கள் தங்கள் எதிர்காலத்திற்காக கடினமாக உழைப்பதைப் பார்ப்பது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அவளுடைய எதிர்கால முயற்சிகளுக்கு நாங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கவீஷா வன்னிநாயக்க

இல, 221, வெலபட வீதி, கட்டுநாயக்கவை வசிப்பிடமாகக் கொண்ட எச்.ஜ.சமன்மலி ஆகிய என்னால் ரத்வெகி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.